# தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2025 நளி (அக்-நவம்-94) விலை உருபா 1-50 (இதழ் எண்: 173)


# இன்றைய செயலலிதா ஆட்சி தமிழுக்கும் தமிழினத்துக்கும் பகையானது!

## பெரியார் கொள்கைக்கும் அது மாறானது!

## கருஞ்சட்டைக் காரர்களும் தமிழ் மக்களும் இதை நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்!

### பெரியாரியல் ஆய்வறிஞர் வே. ஆனைமுத்து அவர்களின் எச்சரிக்கை!

(**முன்னுரை:** நம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ***'மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி'*** அமைப்பாளரும், தொடக்கக் காலம் முதல் பெரியார் கொள்கைகளின் உண்மையான, தூய தொண்டரும், அவர் கொள்கைகளை இந்தியா முழுவதும் பரப்புவதில் முதன்மைப் பங்கு பெறுபவரும், பெரியார்-பெரியாரியலின் ஒப்புயர்வற்ற, 'வரலாற்றாசிரியரும், மிகச் சிறந்த குமுகாய, தமிழின நலச் சிந்தனையாளரும், தமிழின நலத்திற்கென்று அல்லும் பகலும் எழுத்தாலும் பேச்சாலும் செயலாலும் அயராது உழைக்கும் அரும்பெரும் தமிழினத் தலைவரும், கடந்த பதினேழு ஆண்டுகளாகச் ***'சிந்தனையாளன்'*** எனும் சீரிய கொள்கை இதழை ஆசிரியராக இருந்து தொய்விலாது, பல பொருளியல் இழப்புகளுக்கும் இடையில் நடத்தி வரும் கொள்கை மறவரும் ஆகிய குமுகாயவியல் பேரறிஞர் ***வே. ஆனைமுத்து*** அவரின் மே-'94 ***'சிந்தனையாளன்'*** (சுவடி: 16, ஏடு: 11) இதழில் ***'காசைக் கும்பிடுவது கல்லைக் கும்பிடுவதை விட இழிவானது'*** என்னும் தலைப்பில் இக்கால் நடைபெற்றுவரும் ***செயலலிதாவின்*** ஆட்சி குறித்தும், அதை ஆதரித்துப் பாராட்டிக் கொண்டுள்ள ***திராவிடர் கழகத்தின்*** நடைமுறைகள் குறித்தும் உண்மையான, நடுநிலையான, பற்பல செய்திகள் அடங்கிய ஒரு கட்டுரையை எழுதியுள்ளார். அக் கட்டுரைக் கருத்துகள் பலருடைய பார்வைக்கும் செல்ல வேண்டும் என்பது நம் கருத்தாகும், எனவே நம் ***'தமிழ்நிலம்' 'தென்மொழி'*** அன்பர்கள் அறியும்

Scanned with CamScanner

பொருட்டு அக் கட்டுரை தேவையான அளவில் சுருக்கப் பெற்று இங்குத் தரப்பெறுகிறது. கட்டுரை சுருக்கப் பெற்றதே தவிர, அதிலிருந்த சொற்கள் மாற்றம் பெறாமல் அவ்வாறே வெளியிடப் பெறுகின்றன) —ஆசிரியர்.

**சங்கமும்—அறக்கட்டளையும்:**

பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனம் ஓர் அறக்கட்டளை அன்று; அது ஒரு சங்கம்,

பெரியாரின் சுயமரியாதைக் கொள்கையை ஏற்றுக்கொண்ட எவரும் இதில் உறுப்பினர் ஆகலாம். ஒரு சங்கம் என்பதால் இந்த உரிமை. அதனால்தான் திராவிடர் கழகத்தின் மத்திய நிர்வாகக் கமிட்டியின் உறுப்பினர்கள் எல்லோருமே பதிவு பெற்ற சுயமரியாதை இயக்கத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள்தான் என்று 1967-இல் அறிவித்தார் பெரியார். இது நடப்புக்கு வராமலே பார்த்துக் கொண்டவர்கள்தான் மணியம்மையும், வீரமணியும், நாகரசம்பட்டி சம்பந்தமும்.

ஓர் அறக்கட்டளை என்பதில், பதிவு செய்த போது உள்ளவர்களே ஆயுள் முழுவதும் இருக்க முடியும். அதனால்தான் பெரியார் மறைந்த பிறகு எல்லாவற்றையுமே அறக்கட்டளைகள் என்று பதிவு செய்தனர், இவர்கள்.

**பெரியாரின் உழைப்பு:**

சுயமரியாதை இயக்கம் பெரியாரின் சொந்த நேரம், சொந்தப்பணம், சொந்த உழைப்பு இவற்றில் பெரிய அளவு செலவு செய்து வளர்க்கப் பட்டது. அவருடன் அப்படி உழைத்தோர் எண்ணற்றவர்.

பெரியாரிடம் பொதுமக்கள் பணம் தந்தது என்பது 1938 இந்தி எதிர்ப்புக்குப் பிறகுதான்.

பெரியார் ஒரே நேரத்தில் பெருந்தொகை திரட்டியது என்பது 1959-1962-இல் சென்னை எழும்பூர் பெரியார் திடலை வாங்கிடவும், வாக்காளர் மாநாட்டை நடத்திடவும்தான், தமிழர்களில் இலட்சக்கணக்கானவர்களிடம் ஆயிரக்கணக்கான தி.க.தொண்டர்கள் இப்பணிகளுக்கு நிதிபெற்றனர். பெரியார் நூற்பு ஆலைகளிலும் நெசவு ஆலைகளிலும் பணத்தைப் போட்டு அவற்றிலிருந்து கிடைக்கும் வட்டி மூலம் பணத்தைப் பெருக்கினார். தனிப்பட்ட சிலரிடமும் குறைந்த வட்டிக்குப் பணம் தந்திருந்தார். தம் சொந்தக் குடும்பச் சொத்து மூலமும் நூல்கள் விற்பனை மூலமும் வந்த வருவாய் வேறு.

இப்படிச் சேமிக்கப்பட்ட இவ்வளவு பெரிய சொத்துக்கள் இன்று எந்த எந்தப் பணிகளுக்குப் பயன்படுகின்றன? இந்தப் பணிகளால் எப்படி, எந்த வடிவத்தில் பெரியாரின் சுயமரியாதைக் கொள்கை உரம் பெற்றது—உரம் பெறுகிறது என்பதைப் பற்றிக் கவலைப்பட, எடுத்துக்கூற, கேள்வி கேட்க ஒவ்வொரு தமிழனுக்கும் உரிமை உண்டு. பெரியாரின் கட்டளைகளை நிறைவேற்று-வதில் ஈடுபாடு கொண்டுள்ள ஒவ்வொருவருக்கும் இதில் அதிக உரிமை உண்டு.

**ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள...**

இந்தப் பின்னணிகளை இன்று திராவிடர் கழகத்தில் உள்ளவர்களும், பொதுமக்களும், பெரியார் அன்பர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

அப்படிப் புரிந்து கொண்டால்தான்,

1. அறக்கட்டளைகள் என்பவை, வெகுமக்கள் பங்கும் இடமும் பெற முடியாத, கூட்டுக் கொள்ளை நிறுவனங்கள்.

2. தனியார் கல்வி நிறுவனங்கள் நடத்துவது என்பது கள்ள நோட்டு அடிக்கும் நோட்டுச் சாலை நடத்துவது போன்றது.

3. "தி.க.வின் வகுப்புவாரிக் கொள்கையை எந்த அரசு நிறைவேற்றினாலும்; அதை ஆதரிப்பதே பெரியார் கொள்கை. எனவே தி.க. இன்றைய செயலலிதா ஆட்சியை ஆதரிக்கிறது"

—என்கிற இவர்களின் மாயமாலமும், பொய்யும் புரியும்.

1, பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவனத்தில் இன்று எத்தனை ஆயிரம் சுயமரியாதைக்காரர்கள் உறுப்பினர்கள் ஏன் அப்படி உறுப்பினர்கள் இல்லை? தி.க வினர் எல்லோரும் இதில் பொதுக் குழு உறுப்பினர்களா?

2. பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறு-வனத்திற்கு வாழ்நாள் முழுவதும் எப்படி ஒருவர் செயலாளர் ஆக முடியும்? இந்தச் சங்கத்தில் எங்கே அப்படி விதி இருக்கிறது? சங்கங்கள் பதிவுச் சட்டத்தில் எங்கே அப்படி விதி இருக்கிறது? இல்லை.

எனவே சங்கங்கள் பதிவுச் சட்ட விதிகளின்-படி ஆயுள் செயலாளராக ஒருவர் இருப்பது சட்ட விரோதம்—என்று சென்னை உயர்நீதி மன்றம் சொன்ன உடனேதான்—அதிலிருந்து தற்காலிகமாகத் தப்பிக்க வேண்டித்தான்—முதல்வர் எம்.ஜி.ஆரை ஓடோடிப் பார்க்க வேண்டிய கட்டாயம் வீரமணிக்கு ஏற்பட்டது.

**கருணாநிதிக்கா? எம்.ஜி.ஆருக்கா?**

கருணாநிதி பிற்படுத்தப்பட்டோருக்குத் தந்த ஒதுக்கீட்டு அளவைவிட, எம்.ஜி.ஆர். தந்த ஒதுக்கீட்டு அளவு அதிகம் என்பது உண்மை.

அப்படி அதிக அளவு ஒதுக்கீடு தரவேண்டும்—தரமுடியும்—60% பிற்படுத்தப்பட்டோருக்குத் தர வேண்டும் என்று எழுத்து மூலம் கோரிக்கை

வைத்த ஒரே கட்சி மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிதான்.

நாங்கள் எம்.ஜி.ஆரிடம் கோரிக்கை வைத்தது ஆகஸ்டு, 1979-இல.

இந்த 1979-ஆகஸ்டுக்கு முன்னுள், இப்படி ஒரு கோரிக்கையை, தி.க. வைததா? இது பற்றி 'விடுதலை' எழுதியதா? 'உண்மை' இப்படிக் கோரியதா?

தி.மு.க. உட்பட, வேறு எந்தக் கட்சியாவது இப்படிக் கோரியதா? இல்லையே!

இப்படி தி.க வோ, தி.மு.க.வோ கோராமலே தான் பிற்படுத்தப்பட்டோருக்கு 1-2-1980-இல் 50% இடஒதுக்கீடு தந்தார் எம் ஜி.ஆர்.

இந்த வகுப்புவாரிக் கொள்கை வெற்றி. பெரியாரின் இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு—தி.க.வின் கொள்கைக்கு ஒரு வெற்றிதானே? ஆம்,

"இப்படிப்பட்ட இட ஒதுக்கீட்டுக் கொள்கை வெற்றிக்காக ஒரு ஆட்சியை ஆதரிப்பதுதான் தி.க.வின் கடமை" என்பது உண்மையானுல்—1980-இல், 1981-இல்,1982-இல், 1983-இல்—ஏன் 1986 வரையில் கூட, எம்.ஜி.ஆரை தி க. ஆதரிக்காதது ஏன்?

பிற்படுத்தப்பட்டோருக்கு எம்.ஜி ஆர். 50% தந்த போது, அதற்காக, அவரை ஆதரிக்கவில்லை தி.க.

"சுயமரியாதை நிறுவனத்துக்கு ஆயுள் செய வளர் கூடாது.' என்ற தீர்ப்பு வந்தவுடனே, உச்சநீதிமன்ற இடைக்காலத் தடை ஆணை கிடைப்பதற்குள், எம் ஜி.ஆர். அரசு எந்த ஓர் ஆபத்தையும் தனக்கு விளைவித்துவிட கூடாது என்கிற ஒரே காரணத்துக்காக, எம்.ஜி.ஆரைக் கண்டு பேசிவிட்டு, "காவிரிப் பிரச்சனையைப் பிட்டு வைக்கவே எம்.ஜி.ஆரிடமும் போனேன்" என்று பிலாக்கணம் பேசியது, தி.க

**ஜானகியிடம் சரணுகதி**

எம்.ஜி.ஆர் . மறைந்தார், அவரிடம், தஞ்சை வல்லத்தில் பெண்கள் பொறியியல் கல்லூரி தொடங்கிட இவர்கள் கேட்ட அனுமதி அதுவரை கிடைக்கவில்லை இந்த அனுமதி அவர்களுக்கு வேண்டும். எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகிதான் முதலமைச்சர் ஆகப்போகிருர் என்று தெரிந்தவுடனேயே, அவருடை வீட்டுக்கு விழுந்தடித்து ஓடி. "நீங்கள்தான் முதலமைச்சர் ஆகும் தகுதி உடையவர்" என்று கூறி, சரணுகதி அடைந்தது. தி.க.

இஃதே எந்த வகுப்புவாரி உரிமை ஜானகியால் வந்தது? அப்போது எதற்காக ஜானகிக்கு ஆதரவு?

பெண்கள் பொறியியல் கல்லூரி ஆசியாவிலேயே பெண்களுக்கான ஒரே பொறியியல் கல்லூரி என்பது, 180 பெண்களில் 90 பேர்களிடம் ஆண்டுதோறும் ரூ. 25 ஆயிரம், ரூ.35 ஆயிரம்—அதாவது, 20 இலட்சம் 30இலட்சம் லஞ்சம் பெற வழிவகை செய்வதற்குத் தானே ஒருபொறியியல் கல்லூரி! அதற்காகத் தானே ஜானகியிடம் சரணுகதி?

**கல்வி நிறுவனங்கள்—ஏன்?**

இது சுயநிதிக் கல்லூரி, இதற்கு அரசு பணம் தராது, இந்த மிகப் பெரும் நிறுவனத்தை எப்படி நடத்துவது? பணம் பெற்றுத்தானே நடத்த வேண்டும்? கிறித்துவர்கள் இப்படி நடத்தவில்லையா? இந்து மடங்கள் இப்படி நடத்தவில்லையா என்பதுதான் பலரும் இது பற்றித் தெரிந்திருக்கிற—கூறுகிற செய்தி.

கிறித்துவன், இன்று இருக்கிற சமூக அமைப்பை அப்படியே காப்பாற்ற இருப்பவன். இந்துவும், இஸ்லாமியனும், மற்ற ஒவ்வொரு மத வாதியும் அப்படியே!

சுயமரியாதைக்காரன் இன்று இருக்கிற அமைப்பை அடியோடு மாற்ற வேண்டியவன்.

இன்று இருக்கிற கல்வித் திட்டம் இதற்கு உதவாது.

எனவே இதையே மாற்ற வேண்டியவன் சுயமரியாதைக்காரன்,

இன்றைய கல்வித் திட்டத்தை எதிர்ப்பதுடன் கல்வியை—ஒரு பெருந் தொழிலைத் தனியார் மயப் படுத்துவதை எதிர்க்க வேண்டியன் சுயமரியாதைக் காரன்.

இதை விட்டுவிட்டு, கல்விப் பணி என்பது ஒரு "சமூக நலப்பணி" எனக் கூறி நியாயப் படுத்திக் கொண்டு,

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுடன் கூட,
பொறியியல் கல்லூரி
மருந்தியல் கல்லூரி
மேல்நிலைப் பள்ளி
மெட்ரிக்குலேசன் பள்ளி
மகளிர் பாலிடெக்னிக்
மகளிர் அய்.டி.அய்.

என அறக்கட்டளைகளின் பேரால் கல்வி நிறுவனங்களை அமைத்துக் கொண்டே போவதும், இந்த ஒவ்வொரு நிறுவனத்தையும் வளர்த்திட—நிலைப்படுத்திட மாணவர் — மாணவிகளிடம் தலைக்கு ரூபாய் 10 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை ஆயிரக்கணக்கானவர்களிடம் இலஞ்சம் பெறுவதும எதற்காக?

இந்தக் கொள்ளை போதாது என்று,பெரியாரிடம் அன்பு கொண்டுள்ள பொது மக்களிடம் 100,

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

### தலைநகர்த் தமிழ்ச் சங்கம் சார்பில்
### தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரி

# உலகத்தமிழ் மாநாட்டு முன்பு தமிழறிஞர்கள் உண்ணுநோன்பு!

தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேற்றப் பட்டு(1956) 38 ஆண்டுகள் ஆகியும், மீண்டும் அதைச்செயல்படுத்துவதற்காக 1968-ஆம் ஆண்டு, தமிழகச் சட்டமன்றத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் தீர்மானம் கொண்டு வந்து 26 ஆண்டுகள் ஆகியும், தலைமைச் செயலகம் தொடங்கி உள்ளாட்சி மன்றம் வரை பத்து விழுக்காடு அளவுக்குக் கூடத் தமிழ் ஆட்சி மொழியாக ஆக்கப் பெறவில்லை.

95 விழுக்காடு தமிழ் மட்டும் தெரிந்தவர்கள் வாழும் தமிழ் நிலப்பரப்பைத் தமிழின் பெயரைச் சொல்லி ஆட்சி செலுத்தும், அரசு பிறப்பிக்கும் ஆணைகள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே வந்து கொண்டு இருக்கின்றன.

முதலமைச்சரிடமும், அமைச்சரிடமும் காணப் படுகின்ற ஆங்கிலப் பற்றினைப் பாலமாகப் பயன்படுத்தித் தமிழே தெரியாத அரசு அதிகாரிகள் தமிழைப் பின் தள்ளி ஆங்கிலத்தை முன்னிறுத்துகின்றனர்.

தமிழ்நாட்டில் ஆங்கில மழலையர் பள்ளிகள் பல்லாயிரக்கணக்கில் புற்றீசல் போல் பெருக்கெடுத்துத் தமிழ்நாட்டைக் "குட்டி ஆங்கில நாடாக" மாற்றி வருகின்றன. இது தவிர, தமிழக அரசின் ஏற்பிசைவு(அங்கீகாரம்) பெற்ற ஆங்கில வழிப் பள்ளிகளிலும், நடுவண்(மத்திய) அரசின் இசைவுபெற்ற ஆங்கில வழிப் பள்ளிகளிலும்,இந்தி, பிரஞ்சு, சமசுக்கிருதம், சப்பான் மொழி உருசிய மொழி போன்ற மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் தமிழை ஒரு பாடமாகக் கூட கற்காமல் எத்தகைய உயர்கல்வியையும் பெறலாம் என்னும் இழிநிலை நிறைந்து காணப்படுகிறது.

கர்நாடகம், ஆந்திரம், கேரளம் போன்ற தென் மாநிலங்களாயினும். இந்தி வெறி கொண்டலையும் வடமாநிலங்களாயினும் தம் தம் மாநில மொழி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி வருகின்றன. மேற் குறிப்பிட்ட மாநிலங்களில் காணப்பெறும் மொழி வளர்ச்சிப் பணியில் பல நூற்றாண்டுகள் பின் தள்ளிக் காணப்படுகிறது.

இந்த நிலைமைகளை எல்லாம் எடுத்துக்காட்டும் வகையில் கீழ்க்காணும் கோரிக்கைகளை முன்னிறுத்தித் **'தலைநகர்த் தமிழ்ச் சங்கம்'** மாநாடுகள், உண்ணுநோன்பு, முழக்க ஆர்ப்பாட்டம், தலைமைச் செயலக முற்றுகைப் போராட்டம், ஆங்கில அரசாணை எரிப்புப் போராட்டம். சட்டப்பேரவை முற்றுகைப் போராட்டம், முதலமைச்சர் வீட்டு முன் ஆர்ப்பாட்டம் எனப் பல போராட்டங்களை நடத்திச் சிறைப்பட்டும் தமிழக அரசு தமிழ் வளர்ச்சிக்கு வழி ஏதும் காணாது நீண்ட உறக்கத்திலுள்ளது.

எனவே, தமிழக அரசு எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தவிருக்கும் இந் நேரத்தில் மீண்டும் அதற்கு நம் கோரிக்கைகளை நினைவூட்டுவது நம் கடமையாகும்.

1. ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் மட்டுமே பயிற்று மொழி, பாட மொழியாகவும், ஆறும் வகுப்புக்கு மேல் ஆங்கிலத்தை ஒரு பாடமாகவும் கற்றுக் கொள்ள வாய்ப்பளித்தல்.
2. தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தைத் தலைமைச் செயலகம் தொடங்கி அனைத்து நிலைகளிலும் முழுமையாக நடைமுறைப் படுத்தல்.
3. தமிழ்வழிப் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளித்தல்.
4. பன்னிரண்டாம் வகுப்புத் தமிழ் மதிப்பெண்ணையும், உயர் தொழில் நுட்பச் சேர்க்கைத் தகுதிக்கான மதிப்பெண்ணாக கணக்கிடல்.
5. மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் போன்ற உயர்கல்விகள் அனைத்தையும் தமிழ் வழித் தொடங்க விரைவான நடவடிக்கையினை மேற்கொள்ளல்.
6. அரசுத் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் அனைத்தையும் தமிழிலேயே நடத்தல்.

—ஆகிய இவை போன்ற கோரிக்கைகளை ஏற்காது உலகத் தமிழ் மாநாடு நடத்துவது, தமிழ் மொழிக்கும், இனத்திற்கும் நலம் சேர்ப்பதாகாது என்பதுடன், அது தனி மாந்த விளம்பரத்திற்காக நடத்தும் மாநாடாகவே அமையும் எனப் பலமுறை சுட்டிக் காட்டியுள்ளோம்.

இறுதியாக இவ்வேளையில் இக்கோரிக்கைகளைத்தமிழக அரசின் முன்னர் வைத்துத் தலைநகர்த் தமிழ்ச் சங்கம் தஞ்சையில் ஓர் உண்ணுநோன்புப் போராட்டத்தை நடத்த முடிவு செய்திருக்கிறது. அப்போராட்டத்தில் தமிழகம் முழுவதிலும் உள்ள தமிழறிஞர்களும், பேராசிரியர்களும, ஆசிரியர்களும், இளைஞர்களும், மாணவர்களும் தமிழன்பர்களும் கலந்து கொள்வார்கள்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

"உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்"

# ஒரு தலையாய முற்போக்குச் சிந்தனை !

கரடிப்பட்டி. க.கண்ணன். அறி.இ.

*'உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்'*திற்கான அரசியல் ஆவணங்களைத் தொகுப்பது குறித்தும், நடைமுறைச் செயல்பாடுகள் குறித்தும் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. இனி, அதை விட அரசியல் ஆவணங்களைத் தொகுப்பதை விட இயக்கத்தின் இன்றைய தேக்க நிலையைப் போக்கி அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்வது எவ்வாறு என்பதைப் பற்றியே நாம் சிந்திக்க வேண்டும்.

*'உலகத் தமிழின முன்னேற்றக் கழக'*த்தின் ஏழு அடிப்படைக் கொள்கைகளான ***மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, பண்பாடு, அறிவியல்*** ஆகிய கூறுகள் அனைத்துமே உலகளவிலான தமிழினத்தை இவ்விடைக்காலத்தில் இறுகக் கட்டமைப்பதற்கும், இதிலிருந்து மக்களின் உரிமை உணர்வுகள்— அரசியல் உணர்வுகளாகப் படிநிலைவளர்ச்சியுற்று அடுத்த கட்டத்தில் தமிழர்கள் தங்களின் முழுவிடுதலையை நோக்கிச் செல்ல வேண்டுமென்ற ஒரு நீண்ட காலத் திட்டத்திலேயே **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் தமிழின விடுதலைக்கான கொள்கையை வகுத்தார்கள். ஆனால், இங்குள்ள குமுகாய, அரசியல், பொருளியல் சூழலுக்கேற்ப வெவ்வேறு வகையான கொள்கைக்கு முன்னுரிமை கொடுத்து, தனித்தனியாக இயங்கி, அவரின் நடைமுறைக்கேற்ற கொள்கையை முழுமையாக விளங்கிக் கொள்ளாமல் அவரைத் தனிமைப்படுத்தினர்.

முதலாவது, மொழிநிலையில் தமிழ்மொழி சிதைக்கப்பட்டுக் கலப்பு மொழியானதற்கான வரலாற்று மற்றும் அரசியல் வழியிலான காரணங்களை முன்பு யாரும் சரியாகப் புரிந்துக் கொள்ளவில்லை. ஆரியரிலிருந்து இந்தியாவிலுள்ள தெலுங்கர், கன்னடர், மராத்தியர், இசுலாமியர், ஐரோப்பிய இனங்கள், இந்தியர் யாவரும் மாறி மாறித் தமிழினத்தை அரசியலில் வீழ்த்தி, தங்களின மொழி வழியே ஆளுமை செய்ததாலும்: நம் தமிழ்மொழியும் கலப்பு மொழியாக்கப்பட்டதாலும், தனித் தமிழ்க் கொள்கைக்கு இன உணர்விற்கான — முன்னேற்றத்திற்கான—விடுதலைக்கான ஓர் அரசியல் காரணமும பின்னணியாக இருப்பதை மற்ற கொள்கைகளுககு அழுத்தம் கொடுப்போர் ஏற்றுக் கொள்ளவில்லை; இன்றும் ஏற்றுக் கொள்ளவில்லை.

இரண்டாவது, குமுகாய நிலையில் அவரின் சாதியற்ற—மத வேறுபாடற்ற கொள்கையிலும் பலர் தெளிவுறவில்லை. பிராமணியம் உயிர் வாழ்வதற்கான தன்மைகளுள் முதன்மையானவை தமிழினத்தின் சாதி வேறுபாட்டு உணர்வும், அதன் வழியிலான இந்து மத ஆளுமையுமேயாகும். உ.த.மு.கவில் சாதியொழிப்புக் கொள்கையும் ஒன்றாக இருப்பதால், பலர் அவரோடு இணங்கிப் போக முடியவில்லை. அவரின் தமிழின உணர்வைக் கொண்டு ஒடுக்கப்பட்ட சாதியினரும் அவருக்கு ஆதரவு காட்டவில்லை. மேலும் மதக் கொள்கைக்கும் அவர் காட்டுகின்ற ஓர் இறைப் பேராற்றல் கொள்கைக்கும் மிகப் பெரிய வேறுபாடுண்டு. இறைமைபற்றி அறிவியல் வழியில் நாம் முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும். பாவலரேறு அவர்கள் ஓர் இறைப் பேராற்றல் கொள்கையுடையோராய் இருப்பதால், இறை நம்பிக்கையற்ற பெரியார் மற்றும் பொதுவுடைமைக் கொள்கையாளர்கள் அவருக்குத் துணை நிற்கவில்லை.

மூன்றாவது, அரசியல் நிலையில் என்னதான் அவர் வெவ்வேறு கொள்கைகளைக் கூறினாலும், இக்கொள்கைகள் அனைத்தும் முழுமையாக நிறைவேறுவதற்குத் தமிழினம் அரசியல் வழியான விடுதலை பெற வேண்டும். அஃதாவது தமிழ்நாடு இந்திய ஆட்சியினின்று விடுதலை பெற வேண்டும். பாவலரேறு அவர்களின் இந்தத் தமிழ்நாடு விடுதலைக் கொள்கையைப் பலர் ஏற்றுக் கொள்ளவில்லை. நேரடியாகப் பலர் பங்குகொள்ள முடியாது என்ற எண்ணத்திலும், அதற்குக் காலத்தை யொட்டிய ஒரு படிநிலை வளர்ச்சி தேவை என்ற எண்ணத்திலுமதான் உ.த.மு.கவின் ஏழு அடிப்படை கொள்கைகளை அவர் வகுத்தார்.

காலத்தின் மாற்றத்தையொட்டி அவரின் இறுதிக் கொள்கையை நோக்கி, இந்திய தேசியத்திலும் திராவிட தேசியத்திலும் இருந்த சிலர் வந்து கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் நாம் உ.த.மு.கவின் ஏழு கொள்கைகளில் ஊன்றி நின்று, நடைமுறையில் எவ்வெவற்றுக்கு அழுத்தம் கொடுத்துச் செயல்படலாம் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். தமிழ்த் தேசிய இன உணர்வில் இயல்பாய் இணைய முடியாத சூழல் இங்குள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், மத வழியான கிறித்துவ மற்றும் இசுலாமியத் தமிழருக்கும், மொழி வழியிலான சிறுபான்மையாகவுள்ள தெலுங்கர்-கன்னடர், மலையாளர், மற்றும் சில இனத்தினர்க்கும் உள்ளது ஆயினும் இங்குள்ள மதவழிச் சிறுபான்மையரில் பலர் வரலாற்றுக் காரணங்களால் இடையில் மதம் மாறியதாலும், மொழி

Scanned with CamScanner

வழிச் சிறுபான்மையரின், வாழ்வியல் கூறுகளில் பல தமிழினத்தோடு சார்புடையதாக இருப்பதாலும், இறுதியில் இவையெல்லாவற்றுக்கும் 'ஆரியப் பார்ப்பனியமும் முதலாளியமும் எதிராக இருப்பதாலும் இவர்கள் அனைவரும் தமிழ்த் தேசிய இனத்தோடு படிப்படியாக இணைந்து போராடுவது தவிர்க்க முடியாததாகும். அவ்வாறு இணைய முடியாத நிலையை மதவழி,மொழிவழிச் சிறுபான்மையருக்கு உருவாக்குவதுதான் ஆரியப் பார்ப்பனியத்தின் இன்றைய பிரித்தாளும் சூழ்ச்சியாகும். ஆகவே அதற்கான கொள்கைகளை நாம் விரிவாக வரைவு செய்ய வேண்டும்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் மெய்யியலைப் புரிந்துக் கொண்டு, பெரியாரின் இறை மறுப்புக் கொள்கையிலும் பொதுவுடைமைக் கொள்கையிலும் முழுமையாக நம்பிக்கை கொள்ளாமல், சாதிய அடிப்படையில் மக்களைத் திரட்டுவதில் அதிகம் அழுத்தம் கொடுக்காமல், தமிழ்தேசிய இன ஓர்மையிலும் தமிழக விடுதலையிலும் அதிகம் நம்பிக்கை கொண்டு, அதற்கான கருத்தைத் தேடலிலும் பரப்பலிலுமே தம்முடைய நாற்பது ஆண்டுக் கால வாழ்க்கையைச் செலவிட்டிருக்கின்றார். அவரின் மெய்யறிவுக் கொள்கை நம்மில் பலருக்குப் புரியவில்லையென்றாலும், அண்ணல் அம்பேத்கார் அவர்களின் சாதியொழிப்புக் கொள்கை, தந்தை பெரியாரின் இறை மறுப்புக் கொள்கை, மார்க்சியத்தின் வகுப்புப் போராட்டம் ஏன் இங்கு இன்னும் முழுமையாக வெற்றி பெறவில்லையென்ற கேள்வி எழுகின்றது. ஏன் இக் கொள்கைகளில் மக்கள் முழுமையாக ஈடுபாடு காட்டவில்லை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அண்மைக் காலமாக மனம்—அறிவு, அன்பு—அறிவு, ஆற்றல்—பொருள், அகம்—புறம், பேராற்றல், இறைமை, மதம் பற்றி ஒரு தெளிவடைந்தால், தமிழ்த் தேசிய இன விடுதலைக் கொள்கைக்கு ஒரு வலுச்சேர்க்க முடியுமென்று எண்ணுகிறேன். ஏனெனில் கருத்து முதல் சிந்தனை—பொருள் முதல் சிந்தனை என்ற வேறுபாடுகளை பாவலரேறு ஆற்றல் முதல் சிந்தனை,பொருள் முதல் சிந்தனை என்ற கோணத்தில் பல விளக்கங்களைக் கொடுக்கின்றார். பொருளைச் சிதைத்தால் ஆற்றலாகும்;ஆற்றல் திரண்டால் பொருளாகும்.ஆற்றலை ஆக்கவும் முடியாது;அழிக்கவும் முடியாது என்பது அறிவியல் உண்மையாகும். என்றென்றும் அழிக்க முடியாத ஆற்றலே— இறைமையாக இயங்குவதாகவும், இன்றைய மதங்களுக்கும் இறைமைக்கும் தொடர்பில்லையென்றும் கூறுகின்றார். இவ்வுலகில் உயிரினங்களின் மேம்பட்ட நிலையில் உள்ள மாந்தனின் தன்மையை உயிரற்ற பொருள்களின் தன்மையோடு இணைத்தும் பிரித்தும் அறிய வேண்டுமென்றும் எண்ணுகிறேன. மேலும் உயிரற்ற பொருள்களின் அனைத்துத் தன்மைகளையும் உணர்கின்ற மாந்தன், உயிரற்ற பொருள் மாந்தனின் மனத்தை உணர முடியுமா என்ற கேள்வியும் எழுகின்றது. இவைபற்றிச் சிந்தித்துத் தெளிவு பெற வேண்டியது தேவையென்று நினைக்கின்றேன். அதன் வெளிப்பாடாகவே அண்மைத் 'தமிழ்நிலத்தில்' வருகின்ற "தமிழர்களின் அடிமை நிலையும், சாதியையும்—இறைவனையும் இறுக்கமாக்கியுள்ள பார்ப்பனிய முடிச்சும்" என்ற கட்டுரையாகும். மாந்தனுடைய கட்புலனுக்கு வெளிப்படையாகத் தெரிகின்ற—பல நிலைகளில் பயன்படுகின்ற பொருள்கள், மாந்தனுடைய மனத்தில் பல முரண்பாடுகளை உருவாக்கி அவனை இயங்கச் செய்கின்றன என்பதை நாம் மறுக்க முடியாது என்றாலும், வெளிப்படையாகத் தெரியாத அப்பொருளுக்குள்ள ஆற்றலுக்கும் மாந்தனின் மனத்திற்கும் உள்ள தொடர்பு யாது?பொருள் உணர்வு மட்டுமே இவனை இயங்கச் செய்கின்றதா? என்பதில் எனக்கு ஐயப்பாடுகள் தோன்றியுள்ளன. ஒரு செயலின் விளைவுக்குக் காலம், இடம் இவை இரண்டின் பங்கென்ன, என்பவை பற்றியும் சிந்திக்கிறேன்.

தமிழ்த் தேசிய இன உணர்வை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாத நிலையைப் போலியான திராவிட இயக்கங்கள் உருவாக்கி விட்டதாலும், தாங்கள்தாம் தமிழினத்தின் உண்மையான காவலர்கள் என்று பதவியையும் பணத்தையும் பங்கு போட்டுக் கொண்டதாலும் நமக்கு வேலையும் அதிகமாக இருக்கின்றது; பொறுமையாகவும் செயலாற்ற வேண்டியிருக்கிறது. தமிழகத்தின் அரசியல் களத்தில், முகாமையாக எந்தெந்தக் கருத்துகளில் கட்சிகள் முன்னேக்கி வருகின்றன; இவற்றோடு நம்முடைய உறவுகள் எந்தெந்த அளவுகளில் இருக்கும்—இருக்க வேண்டுமென்பதைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும் ஏனென்றால் அண்மைக் காலத்தில் தலித்தியம், பெண்ணியம், சுற்றுப்புறச் சூழல், மார்க்சியத்தைப் பல்வேறு கோணங்களில் திறனாய்தல் போன்றவை வீச்சாக வந்து கொண்டிருப்பதால், அவற்றுக்கெல்லாம் நாம் விடை சொல்ல வேண்டியிருக்கும். ஆகவே பெருஞ்சித்திரனாரின் இன்றைய நிலைப்பாடு குறித்து மக்களுக்கு விரிவாக எழுத வேண்டும். O

---

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று எதிர்பார்க்கிறோம். அவ்வாறே அவர்களையும் வேண்டிக் கொள்கிறோம்.

தமிழக அரசு இந்த ஞாயமான, தேவையான கோரிக்கைகளில் ஆர்வம் காட்டாது, காவல்துறையை ஏவிவிட்டு போராட்டத்தை முறியடிக்கவும்,முனை மழுக்கவும்,சிறுமைப்படுத்தவும் செய்யுமானால், அவற்றைத் தமிழன்னைக்குச் செய்யும் தீங்காகக் கருதி விளைவுகளை ஏற்றுக் கொள்ளவும் அணியமாக இருக்கிறோம். O

அனைத்துத் தமிழ் மக்கள் சார்பிலே அறிவியக்கப் பேரவை கேட்கிறது.

# உலகத் தமிழ் மாநாடு இப்போது தேவைதானா?

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு என்ற பெயரில் 1995 சனவரியில் தமிழகத்துத் தஞ்சை நகரில் ஒரு கோலாகுலமான விழாவை நடத்திடத் தமிழக அரசு திட்டமிட்டு வருகிறது. இந்தச் சமயத்தில், உலகத் தமிழ் மாநாடுகளின் நோக்கங்கள் என்னென்ன, தமிழ் மக்களின் தாய் மொழியாகிய தமிழின் உரிமை நிலை தமிழகத்தில் எப்படி இருந்து வருகிறது—என்பவைகளைக் குறித்துத் தமிழ் நன் மக்கள் பொறுப்போடு சிந்திக்க வேண்டியுள்ளது.

முனைவர் ஆஷர், முனைவர் கூய்ப்பர், தெ.பொ மீ,மு.வ ,தனிநாயகம்,கா.பொ.இரத்தினம், பேராசிரியர் சாலை இளந்திரையன்,முனைவர் சாலினி இளந்திரையன் ஆகிய அறிஞர்களை உள்ளிட்ட 14 உள்நாட்டு—வெளிநாட்டுத் தமிழ் அறிஞர்களை நிறுவனர்களாகக் கொண்டு உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் 1964-இல் புது தில்லியில் உருவாக்கப்பட்டது. உலக நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் பெரும் பங்களிப்பைச் செய்யக் கூடிய உயர் சிந்தனைகளின் ஒரு களஞ்சியமாக இருந்து வரும் மூத்த மொழியாகிய தமிழைப் பற்றிய ஆராய்ச்சி தமிழக அளவில் ஒடுங்காமல் உலக அளவில் படர்ந்து வளர வேண்டும் என்பதையே முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டு உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் அமைக்கப் பட்டது.

இந்த நெறிமுறையின் படியே கோலாலம்பூரில் 1966-இல் முதலாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. இரண்டாவது மாநாடு தமிழகத்தின் தலைநகரான சென்னையில் நடைபெற்றதாலும், தமிழின் பேர் சொல்லி ஆட்சிக்கு வந்த தி.மு கழகத்தினர் பதவியில் இருந்த காலத்தில் (1968 சனவரியில்) இந்த மாநாடு நடைபெற்றதாலும், தமிழ்ப் பொது மக்களை மாநாட்டு நிகழ்ச்சிகளில் பெரும் அளவு ஈடுபடுத்தும் வகையாக—அந்நாள் தமிழக அரசு மாநாட்டை ஒட்டிய நிகழ்ச்சிகளுக்கு ஆடம்பரமாகத் திட்டமிட்டது.

இந்த நிகழ்ச்சி தொடங்கியே, மாநாட்டின் அடிப்படை நோக்கத்தை மூடிமறைக்கும் அளவுக்கு அதையொட்டிய மற்ற நிகழ்ச்சிகளுக்கு முகாமை தரப்பட்டது. பாரிசில் (1970) நடந்த மூன்றாவது மாநாடும், யாழ்பாணத்தில் (1974) நடந்த நாலாவது மாநாடும் இந்தப் போக்கிலிருந்து வேறுபட்டாலும், மதுரையில் 1981-இல் நடைபெற்ற ஐந்தாவது மாநாடு மீண்டும் அரசியல் ஆடம்பரத்தால் மூடப்பட்டுவிட்டது. அந்த முன்மாதிரியைப் பின்பற்றியே இன்றையே(அ.தி.மு க.) அரசு அந்த மாநாட்டையும், —ஆராய்ச்சி என னும அடித்தளத்திலிருந்து மாற்றி, ஆடம்பர விழாக்களுக்கே முகாமை என்ற தடத்துக்குக் கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவே தெரிகிறது.

எட்டாவது மாநாட்டுக்கான செலவு 100 கோடி உருவா அளவில் இருக்கும் என்று தெரிகிறது. இந்த 100 கோடி உருவாயில் தஞ்சாவூரில் சாலைப் புதுப்பிப்பு, புதிய ஆடம்பர விடுதிகள், அலங்கார வளைவுகள், பொதுநல(சுகாதார)ப் பணிகள் முதலியனவும் நடத்தப்படும் என்று தெரிகிறது. இவை பொதுவாக அந்தப் பகுதி மக்கள் எழுப்பிவரும் கோரிகைகளே. எந்த நேரமும் அரசு இவற்றை நிறைவேற்றி வைக்கலாம். ஏன் செய்தீர்கள் என்று யாரும் கேட்க மாட்டார்கள். உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் பேராலேதான் இந்த உதிரிப்பணிகளை நடத்திவைக்க வேண்டும் என்ற தேவையும் இல்லை. எனவே,-பல கோடிப் பணத்தை உறிஞ்சி இழுக்கக் கூடிய இந்தப் பணிகளை ஆட்சியாளர்கள் தமிழ் நாட்டின் பேரால் நடத்த முற்படும்போது, இந்தப் பணிகளின் தரத்தைக் குறித்தே பொதுமக்கள் ஐயப்படுவதில் ஞாயம் இல்லை என்று சொல்ல முடியாது. தமிழின் பேரால் நடைபெறும் பெரியதொரு நிகழ்ச்சியின் பேரால் ஊழல்கள் நடைபெறும் போது.—அந்த நேரத்து உணர்ச்சிப் பெருக்கில்,—ஆட்சியாளர்களின் ஊழல்களைப் பெரிதுபடுத்தாமல் மக்கள் விட்டுவிடவும் எல்லாவாய்ப்பும் இருக்கிறது அல்லவா?

மக்களின் தாய் மொழியின் பேரால் நடைபெறும் நிகழ்ச்சி கோலாகுலமாகத்தான் நடைபெற வேண்டும். அந்தக் கோலாகுலம், ஏற்கனவே அடிப்படை வசதிகளை கொண்ட ஓர் இடத்தில் உயர்த்தி அமைக்கப்படும் மேற்கட்டுமானமாக இருக்க வேண்டுமே தவிர,அடிப்படை வசதிகளுக்காகவே மாநாட்டுக்கு ஒதுக்கப்படும் பணத்தில் பெரும் பகுதி விழுங்கப்பட்டுவிடக் கூடாது. தவிர, இத்தகைய சில்லறைப் பணிகளை மாநாட்டின் பேரால் நடத்தும் போது, அவற்றால் பயன் பெறுகிற ஒப்பந்தக்காரர்கள் முதலானோரும் அவற்றிற்குப் பொறுப்பு ஏற்கிற அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகளும், தமிழ் நிகழ்ச்சி என்கிற தோற்றத்தையே மாற்றி வழக்கமான பழுது தீர்ப்பு நிகழ்ச்சிகளுக்குள் தமிழையே புதைத்து விடுவார்கள். மக்களிடம தமிழ் உணர்ச்சியை எழுப்புவதாகச் சொலலிக் கொண்டு நடத்தப்படும் இத்தகைய'பணம் புரளும்' நிகழ்ச்சிகளால்—இவற்றில் ஈடுபடுகிறவாகளும் பொது மக்களும் தமிழையே மறந்துவிடக் கூடிய ஏதமும (ஆபத்தும்) இருக்கத்தான செய்கிறது.

Scanned with CamScanner

இந்த மாநாட்டை ஒட்டித் தஞ்சையிலும் அதையொட்டிய பகுதிகளிலும் 100-க்கு மேற்பட்ட வேலைகளை மேற்கொள்ள அரசு திட்டமிட்டிருக்கிறது. அவற்றில் 12 வேலைகள் மட்டுமே தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பில் நடத்தப்படும் என்றும், மற்றவையெல்லாம் அரசின் வெவ்வேறு துறைகள் மூலம் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. சில மாத நாள்தாள்களில் திரைப் பட நடிக—நடிகையர் படங்களைப் பெரிதாகப் போட்டு எங்கோ ஒரு ஓரத்தில் பக்கல்(தேதி)களையும் சிறிதாகப் போட்டிருப்பார்கள். அரசின் இந்த வேலைத் திட்டம் அதைத்தான் நினைவுபடுத்துகிறது.

இந்த இடத்தில் நின்று பார்க்கும் போது,—தமிழுக்குச் செய்ய வேண்டிய பெருமைகளிலிருந்தும் ஆக்கப் பணிகளிலிருந்தும் தமிழ்ப் பொது மக்களின் கவனத்தை முழுமையாகத் திசை திருப்புவதற்காகவே அரசு இந்த வகையாக உலகத் தமிழ் மாநாட்டுக்குத் திட்டமிடுகிறதோ என்கிற பெரிய ஐயம் ஏற்படவே செய்கிறது.

1968-இல் இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் பங்குகொண்ட தமிழகத்துத் தமிழ் அறிஞர்களுக்கு நன்றாக நினைவிருக்கும்; நினைவு இருக்க வேண்டும். மாநாட்டில் பங்குகொண்ட வெளிநாட்டுப் பேராளர்களான அறிஞர்கள் அத்தனைப் பேரும் தங்கள் நாடுகளில் தங்கள் தாய்மொழியே ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் இருந்து வருவதைப் பெருமையோடு குறிப்பிட்டார்கள். கூடவே, "உங்கள் தமிழ் மொழி நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து வரும் வளம் மிக்க மொழி என்று சொல்லுகிறீர்கள்; அ'து ஏன் உங்கள் நாட்டின் ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் ஆக்கப் படவில்லை?" என்று வியப்புடனும் ஏளனத்துடனும் நம்மை நோக்கிக் கேட்டார்கள். அந்நாள் தமிழக முதல்வர் அவர்கள், 23-1-68-இல் "ஐந்தே ஆண்டுகளில் தமிழ்த் தாய்மொழியை ஆட்சி மொழியாகவும் பாடமொழியாகவும் ஆக்கித் தீருவோம்!" என்று சட்டப் பேரவையில் ஒரு மனதாகத் தீர்மானம் நிறைவேற்றியதற்கும் அயல்நாட்டவரின் அந்தக் கேள்வியே காரணமாக இருந்திருக்குமோ என்று நினைக்கத் தோன்றுகிறது. அந்த அளவுக்கு அன்றைக்கு (1968-இல்) நாம் அனைவருமே அயலகத்து அறிஞர்கள் முன் தலைகுனிந்து நின்றோம்!

அண்ணா நிறைவேற்றிய அந்தத் தீர்மானத்தின் பொருள் என்ன என்றால்.—'அடுத்த முறை உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு தமிழகத்தில் நடைபெறும் போது தமிழ்த் தாய்மொழியே ஆட்சி மொழியாகவும் வாழ்வின் அனைத்துத் துறைகளின் மொழியாகவும் ஆக்கப்பட்டிருக்க வேண்டும்' என்று அந்தப் பெருமகன் உளமார விரும்பினார் என்பதாகவே இருத்தல் வேண்டும்.

ஆனாலும், அப்படி எந்த வளர்ச்சிப் பெருமையும் தமிழுக்குத் தரப்படாமலே 1981-இல் ஐந்தாவது மாநாடும் தமிழகத்து மதுரை மாநகரில் நடத்தப்பட்டுவிட்டது. அந்நாள் முதல்வர் திரு.ம.கோ.இராமச்சந்திரன் அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகம், உலகத் தமிழ்ச் சங்கம் என்பன போன்ற 'இயற்கைப் பணிகளை'ச் செய்தாரே தவிர தமிழை ஆட்சியில் ஏற்றிவைக்கும் 'நெஞ்சப் பணி'யை அவராலும் செய்ய முடியவில்லை. அவருடைய நல்ல இயல்புகளையும் நலமான எழுச்சிகளையும் அறிந்தவர்களுக்குத் தெரியும்,—தமிழ்நலன் கருதிய நல்லறிஞர்களின் நெருக்கம் அவருக்குக் கிடைத்திருந்தால் அந்த நெஞ்சப் பணியை அவர் நிறைவேற்றி இருப்பார் என்பது திண்ணம்.

எப்படியோ,—நிறைவேற்றப்பட வேண்டிய தமிழ் முதன்மைப் பணிகளை நிறைவேற்றித்'தமிழே ஆட்சி மொழி, கல்வி மொழி, அறமன்ற மொழி' என்னும் சீரான நிலையை உண்டாக்காமலே தமிழக அரசு எட்டாவது மாநாட்டுக்கு வந்து நிற்கிறது. தமிழைக் குறித்த 1956 ஆட்சி மொழிச் சட்டமும் 1968 ஆட்சி மொழித் தீர்மானமும் ஏழை எளியவர்களுக்கு ஆட்சியாளர்கள் அள்ளி வழங்கும் ஆகாய வாக்குறுதிகளாகவே நின்று விட்டன. நேற்றையும் முந்தாநாளையும் அறவே மறந்துவிட்டே எட்டாவது மாநாட்டுக்குக் கொட்டி முழக்குகிறது தமிழக அரசு. தமிழகத்தின் ஆட்சிகள் தமிழைக் குறித்து (வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும்)வழங்கிய வாக்குறுதிகளுக்கு எந்த மதிப்பும் வைக்காமல், மாநாட்டின் பேரால் சாலைகள் புதுப்பிப்பதிலும் உணவுவிடுதிகள் கட்டுவதிலுமே பெரிய ஈடுபாடு காட்டுகிறது இந்த அரசு.

தமிழகத்து அறிஞர்கள் அனைவரும் 'தமிழ் மொழியிலேயே அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப் பட வேண்டும்' என்று வலியுறுத்திப் போராட்டங்களை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். (தாய் மொழி மூலம்தான் கல்வி நடைபெற வேண்டும் என்பதே உலக அறிஞர்கள் அனைவரின் கருத்தாகவும் இருக்கிறது.) தமிழக அரசு, இந்த ஞாயமான கோரிக்கையைப் புறக்கணித்துவிட்டு ஆங்கில மொழிக்குத் தோரணம் கட்டுவதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறது.

கடந்த சில ஆண்டுகளாகப் புற்றீசல்கள் போல் கிளம்பித் தமிழ்ப் பண்பாட்டுக்கே மாசு பூசிக் கொண்டு இருக்கும் ஆங்கில மழலையர்(நர்சரி)ப் பள்ளிகளை அரசு தடை செய்யவில்லை. 'ஆங்கிலம் மூலமே கல்வி' என்னும் குடியமர்த்த(காலனி) ஆட்சிக்காலத்து அடிமைத் தனத்துக்கே அரசு நடை பாவாடை விரித்துக் கொண்டு இருக்கிறது.

Scanned with CamScanner

தமிழகத்துக் கம்ம(கிராம)ப் புறக் குழந்தைகள் எங்கோ இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் குடியேறியிருப்பது போல நினைத்துக் கொண்டு, அவர்களின் ஆங்கிலப் பேச்சுத் திறனை வளர்ப்பதற்காகக் கம்மப் பள்ளிகளில் திங்கட் கிழமை-களிலும் வெள்ளிக் கிழமைகளிலும் மாணவர்கள் ஆங்கிலத்திலேயே பேச வேண்டும் என்று கட்டளை இட்டிருக்கிறது இந்த அரசு. இந்த நடவடிக்கை-களைக் கவனித்த தமிழ்ப் பொது மக்கள் "தமிழக அ.தி மு.க. அரசு தமிழ் மாநாடு நடத்துவதைவிட ஆங்கில மாநாடு நடத்தினால் பொருத்தமாக இருக்குமே" என்று கேட்கிறார்கள். தமிழ்ப் பொது மக்களின் இந்தக் கேள்வியில் பொருத்தம் இல்லை என்று யாராவது சொல்ல முடியுமா?

1968 மாநாட்டுக்கு வந்திருந்த அயல்நாட்டு அறிஞர்கள் இந்த மாநாட்டுக்கும் வரத்தான் போகிறார்கள், "நீங்கள் என்ன மக்களப்பா,—27 ஆண்டுகளில் ஒரு நத்தை கூடப் பல கல் தொலைவு நடந்திருக்குமே! நீங்கள் தாய்மொழிப் பற்று எனும் திசையில் ஒரு விரற்கடை(அங்குலம்)கூட நகர வில்லையே!" என்று கேட்கத்தான் போகிறார்-கள். "உலகத்தின் இளைய மொழிகளெல்லாம் ஆட்சி மொழிகளாக வீற்றிருப்பதைப் பார்த்தும், அண்டையில் உள்ள கருநாடகத்தார் தங்கள் தாய்மொழிக்குச் செய்கிற சிறப்புகளைக் கண்டும், உங்களுக்குக் கொஞ்சமும் சூடு, சுரணை ஏற்பட-வில்லையே! நீங்கள் மாந்த உயிரிகளாக, நத்தை, தவளை போன்ற குளிர்ந்த அரத்த உயிரிகளா?" என்று நம்மை நோக்கிக் கேட்க நினைத்து,— நாகரிகம் கருதி அதை வாய்விட்டுச் சொல்லாமல், வாய்க்குள்ளேயே மென்று கொண்டு திருப்பிப் போகத்தான் போகிறார்கள்.

"மானத்துக்கும் வீரத்துக்கும் பேர்போனவர்-வர்கள் என்று வணணிக்கப்படுகிற தமிழர்களாகிய நமக்கு இந்த இழிவு ஏற்படவேண்டுமா?" என்பதைக் குறித்துத் தமிழக அரசு சிந்தித்தாலும் சிந்திக்கா விட்டாலும், பொறுப்பு வாய்ந்த தமிழறிஞர்களும், தமிழ்ப் பெருமக்களும் இது நம்முடைய மானச் சிக்கல் என்பதை உணர வேண்டும். உணர்ந்து,—27 ஆண்டுகளாக நிறைவேற்றப் படாமல் கிடக்கிற தமிழ் ஆட்சி மொழி-பாடமொழி அறமன்ற மொழித் தீர்மானத்தை நடைமுறைப் படுத்திவிட்டு, எட்டாவது மாநாட்டுக்குத் திட்ட மிடுங்கள் என்று ஆட்சியாளர்களின் நெஞ்சில் உறைக்கிற வகையாக எடுத்துச் சொல்ல வேண்டும். போராட்டங்கள் தேவை என்றால் அவற்றை நடத்தி ஆட்சியாளர்களை விழிப்படையச் செய்ய அணிய-மாக இருக்க வேண்டும்.

தமிழக ஆட்சியாளரும்,—'பெற்ற தாய் அம்மணம், கும்பகோணத்திலே ஆ(பசு)தானமா?' என்னும் சூடான கேள்விக்காவது தங்கள் நெஞ்ச வாசலைத் திறந்து, அங்கே தமிழைக் குடியேற்றுவதோடு,—ஆட்சி, கல்வி, அறமன்றம் என்னும் அனைத்து இடங்களிலும் தமிழை உடனடியாகக் கொலுவமர்த்த வேண்டும். அதன் பிறகே உலகத் தமிழ் மாநாட்டுக் கோலாகுலங்கள் பற்றி அரசு நினைக்க வேண்டும். நம்புவோம்,—இந்த நல்ல அறிவுரைக்கு நமது தமிழக அரசு காதுகொடுக்கும் என்று நம்புவோம். சாலை இளந்திரையன் O

## ஒவ்வொரு தேசிய இன விடுதலைக்கும் வரலாறு இன்றியமையாதது.

சொந்த வரலாறு தெரியாத தேசிய இனத்திற்கு விடுதலை இல்லை. வரம்பு இல்லாத தேசியப் புரட்சியோ அரசியல் புரட்சியோ இலலை. இதுவே எம் நாடு என ஒரு வரம்பைக் கட்டித்தானாக வேண்டும். அதுவே களனை அறிந்த பின்னர்க் காலத்தை அறியவேண்டும். களனே வரம்பெனின், காலமே வாய்ப்பாகும். வரம்பறியாமல் வாய்ப்பை அறிய முடியாது.

ஒவ்வொரு தேசிய வரம்பிற்குள்ளும் அந்த வரம்பிற்குள் வாழ்கின்ற மக்களுக்கென ஒரு தனிச் சூழல் உண்டு. ஒவ்வொரு வாழ்வியலுக்கும் ஒரு தனி வரலாறு இருந்தேயாக வேண்டும். வரலாறு இல்லாத மக்களும் இல்லை; மக்கள் இல்லாத வரலாறும் இல்லை.

ஒரு பழம்பெரும் நாடு இன்னொரு நாட்டிற்கு அடிமையாகலாம். அந்நிலையில், தொன்மையான பண்பாட்டைக் கொண்ட அடிமையுண்ட அந் நாட்டிற்கு அதனுடைய நீண்ட வரலாறும் வரலாற்று உணர்வும் மீட்சிக்குக் கருவிகளாகும்.

முதுகொடிக்கும் மலை போன்ற ஒரு வல்லரசின் அழுத்தங்களை, உலைமீது வைத்த மூடியைப் போல் தூக்கியெறிகின்ற அசுர வலிமையை அதன் வரலாற்று ஆழமும் அடர்த்தியும் அதற்குத் தரும். தேசிய வரலாறு தேசிய ஓர்மையாகும் போது, தேசிய அடிமைத்தனம் ஒழியத் தொடங்குகிறது. சொந்த வரலாறு தெரியாத மக்களால் தலைநிமிர்ந்து தளையறுத்துத் தன்னுரிமையுடன் வாழமுடியாது.

தென்கிழக்கு ஆப்பிரிக்காவில்தான் மக்களினம் தோன்றிய தெனபது திரிவாக்கக் கொள்கையை வடித்த சார்லசு டார்வின் போன்றோரின் கருத்து. அத் தென்கிழக்கு ஆப்பிரிக்காவும் கூட குமரிப் பெருங்கடலில்(இந்துமாக் கடலில்) மூழ்கி மறைந்த இலெமூரியா என்னும குமரிக் கண்டத்தின் ஒரு கூறாகவோ, அதையொட்டிய இடமாகவோ இருந்-திருக்க வேண்டும் இக் குமரிக்கண்டமே தமிழர்-களின் தொன்மையான தாயகம். உயிரியலாரால் இலெமூரியா என்றழைக்கப் பெற்ற குமரிக் கண்டமே, நிலவியலாரால் கோண்டுவனம் (Gondwana-மறைந்தநிலம்)என்றழைக்கப்பட்ட மறைந்த மீப்பெருங்கண்டத்தின் (Super continent) ஒரு கூறாக விருந்தது.—குணா, நூல்: 'தமிழர் வரலாறு'

# இன்றைய ஆட்சியில் ஊழலே தொழிலாகிவிட்டது!

அண்மையில் நடந்த இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் மாநிலக் குழுக் கூட்டம் ஏ.கே. பத்மநாபன் தலைமையில் சென்னையில் நடைபெற்றது. அதில் அனைத்து இந்தியப் பொதுச் செயலாளர் அர்கிஷன் சிங்,சுர்சித் மற்றும் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் பி.இராமச்சந்திரன் முதலியோர் கலந்து கொண்டனர்.

அக்கூட்டத்தில் தமிழக அரசியல் நிலை குறித்துக் கீழ்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நடுவணரசின் 'காட்' ஒப்பந்தத்தினாலும், அது கடைப்பிடிக்கும் தாராளமய—தனியார்மய பொருளியல் கொள்கையினாலும் மக்கள் கடுமையாகத் தாக்குதலுக்கு(பாதிப்புக்கு) உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

அரிசி, குளம்பி(காபி),சர்க்கரை, பைஞ்சுதை, இரும்பு, மருந்து போன்ற பொருள்களின் விலைகள் ஏறிக்கொண்டே இருக்கின்றன. 'காட்' ஒப்பந்தத்தின் புதிய பொருளியல் கொள்கைகளின் விளைவுகளை உணர்ந்த தொழிலாளர்கள் நடுவண், மாநில அரசு ஊழியர்கள், நடுத்தரப் பிரிவுப் பணியாளர்கள், உழவர்கள், இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள் என பல பகுதி மக்களும் களத்தில் இறங்கிப் போராடத் தொடங்கி விட்டனர்.

பங்கு பேர ஊழல்—என்பதில் நடுவணரசு அமைச்சர்கள், அதிகாரிகள் ஈடுபட்டுள்ள நிலையில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்குதல், தலைமையமைச்சரும் அவரது குடும்பமும் கூட ஊழலில் சிக்கி உள்ள நிலைமை-ஆகியவையாவும் மக்கள் நடுவில் மிகுந்த வெறுப்பை உருவாக்கியுள்ளன.

தமிழகத்தில் அ.தி.மு.க. அரசு, நடுவண் அரசின் அதே பொருளியல் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளைத் தனியார்க்கு விற்க முயற்சி செய்கிறது. அரசுப் போக்குவரத்துத் துறையைக் கூட மெல்ல மெல்ல தனியார்க்கு உரிமையாக்க முயற்சி செய்கிறது.

தமிழகத்தில் புதிய தொழில் வளர்ச்சியில்லை. இருக்கின்ற ஆலைகளும் நெருக்கடியில் சிக்கி உள்ளன. நலிவடைந்த ஆலைகளைச் சீரமைக்க அரசுக்கு அக்கறையே இல்லை.

வேளாண்மையைத் தாக்கமுறச் செய்யும் இறால் பண்ணைக்கு அரசு அனுமதியளித்திருக்கிறது. இதனால் இலக்கக்கணக்கான பழந்தமிழ் வேளாண் தொழிலாளர்கள் வேலை இழந்து தவிக்கும் நிலை ஏற்பட்டு உள்ளது.

கடலில் வெளிநாட்டுக் குழுமங்களுக்கு மீன் பிடிக்க அனுமதி கொடுக்கப்பட்டு உள்ளதால் நம் நாட்டு மீனவர்கள் தாக்கம் அடைந்திருக்கிறார்கள்.

கல்வி வாணிகமாக ஆக்கப்பட்டு விட்டது. தன்னாட்சிக் கல்லூரிகள் மாணவர்களைக் கொள்ளை அடிக்கும் கூட்டங்களாக மாறி விட்டன.

தமிழகத்தில் இது வரை இல்லாத அளவுக்கு ஊழல் பெருகி விட்டது. முதல் அமைச்சர் முதல் மற்ற அமைச்சர்கள் உள்பட ஆளுங்கட்சிப் பெரும் புள்ளிகள் வரை ஊழலில் ஈடுபட்டு உள்ளார்கள். கையூட்டு(லஞ்சம்) ஒரு தொழிலாகவே மாறி விட்டது.

கொலை, கொள்ளை என்பன நடக்காத நாள் இல்லை. சாராய வணிகம் கொடிகட்டிப் பறக்கிறது. ஆளும்கட்சிப் பெரிய புள்ளிகள் மக்கள் நலத்திற்கு எதிரான செயல்களுக்குப் பாதுகாப்புத் தருகிறார்கள்.

குடவாசலில் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி ஊழியர் தங்கையனைக் கொலை செய்த அ.தி.மு.க. அரம்பன்(ரவுடி) இராசேந்திரனைக் காவல்துறை ஒரு மாதமாகியும் தளைப்படுத்தவில்லை. அ.தி.மு.க. அரசே அவனுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறது.

காவல்துறைக் கொடுமை, காவல் நிலைய அடைப்புச் சாவு, கற்பழிப்பு என்பன அன்றாட நிகழ்ச்சிகளாக உள்ளன. தொழிற்சங்க உரிமைகளும், குடிநாயக உரிமைகளும் பறிக்கப்படுகின்றன. ஊர்வலம் செல்லத் தடை. ஆலை முன் ஆர்ப்பாட்டம் நடத்தத் தடை,கருத்துப் பரப்புதலில் ஒலி பெருக்கி வைக்கத்தடை, சுவரொட்டி ஒட்டத் தடை என உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

அ.தி.மு.க. அரசு இந்த அட்டூழியங்களை மறைக்க ஆடம்பர விளம்பரங்கள் பல கோடி வளர்ச்சித் திட்டங்கள் என அறிவிப்புகள் செய்து மக்களை ஏமாற்ற முயற்சி செய்கிறது.

நடுவண் பேராய அரசின், மாநில அ.தி.மு.க. அரசின் பொருளியல் கொள்கைகளையும், கையூட்டு ஊழல்களையும், குடிநாயகப் பகைச் செயற்பாடுகளையும் எதிர்த்துப் போராடுவதும், மக்கள் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் வகுப்பு வெறி ஆற்றல்களை முறியடிப்பதும் இன்று மக்கள் முன்னால் உள்ள முகாமையான கடமையாகும். ஆளும் பிரிவினரின் ஞாயமற்ற கொடுமைகளுக்கு முடிவு கட்ட மக்களின் ஆற்றல் மிக்க இயக்கங்களை உருவாக்கிட வேண்டியது தேவையாகும்.

நாட்டு நலன் காக்கவும் மக்கள் நலன் காக்கவும் நடைபெறும் பேரியக்கங்களுக்கு மக்கள் பேராதரவினைக் கொடுத்திட மாநிலக்குழு வேண்டுகிறது.

—செய்தி அடிப்படை:
'மாலைமுரசு'—10-10-94.

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

500,1,000,10,000. ஓர் இலட்சம் என நன்கொடை பெறுவது எதற்காக?

இப்படியெல்லாம் வருந்தி முயன்று இந்தச் சமூக நலப் பணியைச் செய்வதன் மூலமாக—இங்கே பொறியியல் படித்த—டிப்ளமா படித்த—சான்றிதழ் பயிற்சி பெற்ற மாணவ—மாணவியர் சுயமரியாதைக்காரர்களாக, நாத்திகர்களாக, பெரியார் பற்றுளர்களாக, பெரியார் இயக்கப் பணியாளர்களாக, சாதி ஒழிப்புக்காரர்களாக மாறிவிட இந்தப் படிப்பு எப்படி உதவும்? எங்கே உதவியிருக்கிறது? அப்படி உதவியிருப்பதற்கான சான்று என்ன?

கடந்த 38 ஆண்டுகளில் ஆண்டு தோறும் 220, 120, 70 வீதம் பெரியார் பள்ளிகளில் ஆசிரியப் பயிற்சி பெற்றவர்கள் மட்டும்—பெரியார் காலத்திலிருந்து இன்றுவரை 5000 அல்லது 6000 பேர் இருப்பர்.

இவர்களில் எத்தனைப் பேர் சுயமரியாதைக்காரர் வீட்டுப் பிள்ளைகள்?

இவர்களில் எத்தனைப்பேர் சுயமரியாதைக்காரர்களாக உருவானுர்கள்? இவர்கள் படிக்கிற படிப்பில் சுயமரியாதைக் கொளகைக்கு எங்கே இடம் இருக்கிறது?

அண்மைக்காலமாக இப்படிச் சேருகிற மாணவ—மாணவியரிடம 'விடுதலை', 'உண்மை' ஏடுகளுக்குக் கட்டாயமாக வாழ்நாள் கட்டணம் பெறப்படுகிறது. ஒரு நெருக்கடியில் இப்படிச் சந்தா செலுத்துகிறவர்களில் எத்தனைப் பேர் சுயமரியாதைககாரர்கள் ஆவர்? எப்படி இது முடியும்?

பெரியாரின் இயக்க வளர்ச்சிக்கும்—சுயமரியாதைக் கொள்கை வளர்ச்சிக்கும இந்தக் கல்வி நிறுவனங்கள் இன்ன இன்ன வகைகளில், இத்தனை இத்தனை விழுக்காடு பயன்பட்டது என்று எவரேனும் கூறமுடியுமா? 100க்கு ஒரிருவர் அப்படி உருவாகலாம. அந்த ஒரே காரணத்துக்காக இந்த "சமூக நலப்பணி" என்கிற சமூக விரோதமான கல்வி வியாபாரப் பணியை ஏன பெரியார் பெயரால செய்ய வேண்டும்?

200,300 தனியார் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்கச் சொல்லி, ஒவ்வொரு நிர்வாகியிடமும் ரூபாய் 3 இலட்சம் முதல் 5 இலட்சம் வரை இலஞ்சம் பெற்றது எம் ஜி-ஆர். அரசு. இன்று அதையே செய்து, கையும் களவுமாகச் சிக்கிக் கொண்டது செயலலிதா அரசு.

இவர்களுக்குப் பணம் தரவேண்டி, மாணவியரிடம்—மாணவர்களிடம் தலைக்கு ரூ 10,000 முதல் 45 ஆயிரம் வரை இலஞ்சம் பெற்றனர் பள்ளி நிர்வாகிகள். இந்து—இஸ்லாமிய—கிறித்துவப் பள்ளி நிர்வாகிகள் எல்லோரும் இதையே செய்தனர். பெரியார் பள்ளிகளும் இதையே செய்தன. இந்தக் கொள்ளையர்கள் செய்கிற இதே இழிந்த வேலையைப் பெரியார் பெயரால்— பெண் கல்வி வளர்ச்சி என்கிற பேரால்—இன்னமும் தொடர்ந்து செய்வது பணம் சேர்க்கவா? பெரியாரின் கொள்கையை வளர்க்கவா? பெரியாரின் கொள்கையைக் குழிதோண்டிப் புதைக்கத்தானே இது பயன்படும்.

*சமூக நீதி காத்த வீராங்கனை...*

இன்று பெரியாரின் கொள்கையை—தமிழர்களின் நலனை...தமிழின் நலனை—ஆழக்குழி தோண்டி அதில் புதைப்பதுதான் செயலலிதாவின் அராசக ஆட்சி.

செயலலிதா 1991-இல் முதலமைச்சர் ஆனுர்.

தான் ஒரு பார்ப்பனத்திதான் என்பதைச் சட்டமன்றததிலேயே ஆணவத்துடன் கூறிக் கொண்டார். சட்டப்படி-சமூக அமைப்புப்படி அவர் ஒரு பார்ப்பனத்திதான்.

அவருடைய செயல்பாடுகள்—குறிப்பாகக் கல்வித்துறைச் செயல்பாடுகள் தமிழரின் எதிர் காலத்தை—தமிழரின் வளர்ச்சிக்குக் குந்தகம் செய்பவை ஆயிற்றே! இராசாசியை விட ஒருபடி மேலேபோய், கல்வியை—தமிழைப் பாழடிக்கிருரே, செயலலிதா? (தொடரும்)

## தாராபுரம் கி.ஆறுமுகம் 'தடா'வில் இன்னும்!

உரத்த தமிழினத் தொண்டரும், உண்மையான தமிழ்நாட்டு விடுதலை மறவரும், அயராத உழைப்பாளரும், ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு மேல் 'தென்மொழி'யின் பாலும், ஆசிரியரின் மேலும் நல்லன்பும் நன்மதிப்பும் கொண்டவரும், ஆசிரியர் கடந்த ஆண்டு, சென்னை நடுவண் சிறையில் 'தடா'வில் ஏழு மாதங்கள் வைக்கப் பெற்றிருந்த பொழுது அவர்க்குப் பல வகையாலும் துணையாக நின்று தொண்டராகப் பணியாற்றிய பண்பாளரும் ஆகிய தாராபுரம் கி.ஆறுமுகம் கடந்த மூன்ருண்டுகளுக்கு மேல் 'தடா'ச் சிறையாளியாக இருந்து வருகின்ருர் என்பது மிகவும் கொடுமையானது. அவருடன் சிறைப் படுத்தப் பெற்றிருந்த அனைவரும் பிணையலில் விடுதலையாகிப் போன பின்னரும், அவர்க்குப் போதுமான பிணையாளர்கள் இல்லாமல் தொடர்ந்து அவர் சிறையில் இருந்து வருவது மிகவும் வருத்தம் தருகிறது. அரசு அவரைச் சொந்தப் பிணையலில் விடுவிக்குமாறு கேட்டுக் கொள்கிரேம்.

பெருஞ்சித்திரனுர்.

# பெருஞ்சித்திரனார் பேரவை

(சிறப்பு மடல்)

அன்பிற்குரிய தனித்தமிழ் அறிஞர்,பாவலரேறு, ஐயா, அவர்களுக்கு வணக்கம். 10-3-1994 முதல் 62-ஆம் ஆண்டு அகவையில் அடியெடுத்து வைத்திருக்கும் தாங்கள், பல்லாற்றானும் நலமும் வளமும் பெற்றுத் தமிழ்த்தாய் மேன்மேலும் சிறப்படைய வேண்டுகிறோம்.

தங்கள் மீது, **'தென்மொழி'**யின் மீது யாம் கொண்டுள்ள அன்பின் அடையாளமாகத் தங்கள் பெயரில் **''பெருஞ்சித்திரனார் பேரவை''** என்னும் அமைப்பைத் தனித்தமிழ் வளர்க்கும் அன்பர்கள் சேர்ந்து தொடங்கியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம் **'கெஞ்சுவதில்லை பிறர்பால்; அவர் செய் கேட்டினுக்கும் அஞ்சுவதில்லை'** என்ற மறநெறியில் வழுவாது, துணிவாக, நேர்மையாக,சமபோர(சமரச)மற்ற போக்கில் செயல்படும் தங்களைப் பாராட்டுவதுடன் பல்லாண்டுகள் நோய் நொடியின்றி நூறாண்டுகள் வாழவேண்டும். **'பெருஞ்சித்திரனார் பேரவை'**யின் முதல் வெளியீடாகத் தங்களுடைய, **'தமிழர்க்குத் தமிழ்உயிர்!'** என்ற தமிழுணர்ச்சிப் பாடலை வெளியிட்டுள்ளோம்.

> **'தமிழ்ப்பற்றை ஊட்டாத தமிழ்க் கல்வியும்**
> **தமிழ்ப்பற்றை எழுப்பாத ஆசிரியரும்**
> **தமிழ்ப்பற்றை வளர்க்காத மாணவரும்**
> **தமிழ்ப்பற்றுக் கொள்ளாத தலைவரும்**

தமிழுக்கும், தமிழ் நாட்டவர்க்கும் கேடு விளைவிப்பவர்களே என்று பாடல் எச்சரிக்கை விடுத்துள்ளது.25 ஆண்டுகளுக்கு முன் தாங்கள் விடுத்த எச்சரிக்கை, இன்றைய தமிழ்நாட்டின் அவல நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

புதுச்சேரி, **'தனித்தமிழ்க் கழகம்'** வெளியிட்டுள்ள **'தனித்தமிழ் — ஓர் ஆய்வுக் கோவை'** என்ற நூலில் 'தென்மொழி' இதழின் முதல் பத்தாண்டுப் பணிகளை ஆராய்ந்து தென்மொழி இதழின் மூலம் தாங்கள் ஆற்றியுள்ள தமிழ் வளர்ச்சிப் பணிகளைச் சிறப்பாகத் தொகுத்துத் தந்துள்ள சொல்லாய்வு அறிஞர் தமிழ்த்திரு. ப. **அருளியார்** அவர்களுக்கு எங்களுடைய பாராட்டுதலையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். என்றும் தங்கள்

அன்புள்ள, **—இர.அரங்கநாதன்,**
பெரம்பலூர், திருச்சி மாவட்டம்.

## பிரிவினைக் குற்றம் சாட்டுவது முட்டாள்தனமானது!

தன் முடிவுறுதி (சுயநிர்ணய) உரிமையை அஃதாவது பிரிந்து செல்லும் உரிமையை ஆதரிப்பவர்களைப் பிரிவினைக்கு ஊக்குவிப்பதாகக் குற்றம் சாட்டுவது முட்டாள்தனமானது;நயவஞ்சகமானது. இது, மணவிலக்கு உரிமையை ஆதரிப்பதால், குடும்பத்தைக் குலைக்க ஊக்குவிப்பதற்குச் சமமானது என்னும் முட்டாள்தனமான—பாசாங்கான குற்றச்சாட்டாகும்.

—இலெனின். (Selections from V.I Lenin and J.V Stalin on National colonial Question—page.22.)
(தேசியஇனங்களின் சுயநிர்ணய உரிமை -பக்:51.)

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்: 173.)

TN/MS(C)657

**உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!**

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு,வாழ்க்கை இவற்றை விரிவுபடுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றுக்கும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

—சிந்தனைக்கு-93

ஒரு கொள்கையை வரையறுப்பது, அதைச் செயல்படுத்தத் திட்டமிடுவது, அத் திட்டத்தை நிறைவேற்ற பொருளையும் ஆள்களையும் திரட்டுவது, அவற்றைக் கொண்டு, காலமும் இடமும் அறிந்து அச் செயலைப் படிப்படியாய் நிறைவேற்றுவது-இவற்றின் மிகச் சிறந்த நடைமுறையே வெற்றியைத் தேடித் தரும்.

அனுப்புதல்:

**தமிழ்நிலம்**
5, அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு: 1-50 |
| ஆண்டுக் கட்டணம் | உரூ 36.00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு: 18-00 |

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு / திருவாட்டி

ஆ.உ. 464

திரு.க.இராமசாமி,
62, இந்தியன்வங்கிக்குடியிருப்பு,
நாலாம் குறுக்குத் தெரு,
திருச்சி —21

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.